**வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியின் - 2022 மற்றும் 2023**

---

வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியின் 2022 மற்றும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரிய பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரித்த 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| சொத்துக்கள் | |
| **மொத்த சொத்துக்கள்** | **1,258,482,698** |
| **உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | |
| உரிமை மூலதனம் | **1,257,296,648** |
| **பொறுப்புக்கள்** | |
| **மொத்த பொறுப்புக்கள்** | **1,186,050** |
| **மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **1,258,482,698** |
| மொத்த வருமானம் | **1,678,118** |
| மொத்த செலவினம் | **3,902,211** |
| **மிகை / (பற்றாக்குறை)** | **(2,224,093)** |

## 03. கம்பனியைக் கலைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லலித் அத்துல் முதலி மாஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் முதலீட்டு முகாமைத்துவ நோக்கத்தில் ரூபா 200 மில்லியன் (சாதாரண பங்குகள் 20,000,007) ஆரம்ப முதலீட்டுடன் வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி 2003 யூன் மாதம் 23 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. நிதியத்தில் இந்தக் கம்பனியுடன் 2003 நவம்பர் 18 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 3,160.7 மில்லியன் ஆன நிதியப் பங்கை முகாமைத்துவம் செய்தல் இந்தக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிதியத்தால் கம்பனியின் 98,550,007 பங்குகளில் ரூபா 985,500,070 முதலீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>கம்பனி 2017 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு பத்திர கொடுக்கல் வாங்கல்களில் கவனத்திற் கொள்ளக் கூடிய நட்டத்தை | கம்பனியால் நிதி முறைகேடுகள் தொடர்பாக 02 வழக்குகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் தொடரப்பட்டுள்ளமையால் அந்த வழக்குகள் முடிவடையும் வரை கம்பனியைக் கலைத்தல் தாமதமடைந்துள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெற்றிருந்தது. இதன் காரணமாக 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது கம்பனியைக் கலைத்தல் மத்திய வங்கியின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 மார்ச் 02 ஆந் திகதிய இலக்கம் அமப/21/0269/313/012 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கலைப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கோ அல்லது கலைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 4. கணக்கு ஏடுகள் மற்றும் ஆவணங்கள் பேணிச்செல்லப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் 2023 ஆம் ஆண்டிற்குரிய பணிப்பாளர் சபைத் தீர்மானம், வங்கி கூற்றுக்கள், வங்கி இணக்கக்கூற்று, காசேடு, கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள், அடியிதழ்கள், முதலீடு தொடர்பான விபரங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கை, கணக்காளர் கம்பனியான அமரசேகர மற்றும் கம்பனியால் மேற்கொள்ளப்படுவதுடன் சகல அறிக்கைகளும் அந்த கணக்காளர் கம்பனியில் உள்ளதுடன் அந்தக் கம்பனிக்கு சென்று உரிய பரிசோதனைகள் மேற்கொள்ள முடியும். | உரிய நிறுவனத்தின் முகாமைத்துவம் பொறுப்பின்றி செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதி அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உரியதாகும். கணக்குகள் தயாரிப்பதற்காக கணக்காளர் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளல் நிறுவனத்தின் உள்ளகக் பணியாகும். உரிய நிதி அறிக்கைகளை சரியான பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்காமை தொடர்பாக முகாமைத்துவத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |